Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 30, 2024

திங்கட்கிழமை, செப்டெம்பர் 30, 2024 | ஒளி: 10 கதிர்: 061 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

# “பிரிந்தவர்கள் மீண்டும் இணையுங்கள்”

“சவால் மிக்க ஒரு சூழலில் இந்த தேர்தல் இருப்பதனால் இணங்கி வந்து இந்த தேர்தலுக்கு முகங்கொடுக்குமாறு இரு கரம் நீட்டி அழைக்கின்றோம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து இணையுமாறு தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், பாராளுமன்றத் தேர்தலில் வட கிழக்குக்கு வெளியில் போட்டியிடுவது தொடர்பிலும் பரிசீலிக்கப்பட்டதாக அக்கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# “நாங்கள் போக முடியாது”

“அவர்கள் தான் விட்டுச் சென்றவர்கள் எனவே, அவர்கள்தான் வரவேண்டும். அவர்கள் வந்தால் எமது கட்சிகளோடும், சிவில் அமைப்புகளின் கூட்டோடும் கலந்துரையாடியபின்னரே முடிவினை எடுக்கலாம்

க.அகரன்

தமிழரசுக் கட்சியின் நேற்றைய அறிவிப்பின் மூலம் ஆதிக்கம் தமிழரசுக் கட்சியினுடையதே வந்து சேருங்கள் உங்களுக்கு நாங்களாகப் பார்த்துத் தருவோம் என்றவாறான நிலைப்பாட்டைக் கூறியிருப்பதாகவே தெரிகின்றது. அப்படியான நிலைப்பாட்டில் நாங்கள் போக முடியாது என யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஃப்ரைட் ரைஸ், கொத்து விலை குறைப்பு



ஃப்ரைட் ரைஸ் மற்றும் கொத்து ரொட்டியின் விலை ஞாயிற்றுக்கிழமை (30) நள்ளிரவு முதல் 40 ரூபாவினால் குறைக்கப்படும் என உணவகங்கள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சமீப காலமாக முட்டை விலை குறைந்துள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், வெதுப்பகப் பொருட்களின் விலையில் இதுவரை எந்த மாற்றமும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செலவினங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை



விளையாட்டு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் செலவு செய்யப்பட்டமை குறித்த புள்ளிவிபரங்கள் உள்ள போதிலும் அதன் முன்னேற்றம் தொடர்பில் உரிய கணக்காய்வு நடத்தப்பட வேண்டுமெனவும்,

தொடர்ச்சி P2

# ‘யுக்திய’ நிறுத்தம்

‘யுக்திய’ நடவடிக்கைகளுக்காக கடமையாற்றிய பொலிஸ் அதிகாரிகள் அனைவரையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கடமைகளில் இருந்து விடுவிக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2





# சர்வதேச புத்தகக் கண்காட்சியை பார்வையிட்டார் ஜனாதிபதி அனுர

இலக்கிய மாதத்தையொட்டி, இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தினால் 25ஆவது தடவையாக, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ‘கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சியை’ ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சனிக்கிழமை (28) அன்று பார்வையிட்டார்.




# மீள் திருத்தத்திற்கான விண்ணப்பம் கோரல்

சாதாரணதர பரீட்சையின் விடைத்தாள்களை மீள் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பங்கள் ஒக்டோபர் 01ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இணையவழி ஊடாக உத்தியோகபூர்வமாக சனிக்கிழமை (28) நள்ளிரவு வெளியாகியுள்ளது.

தொடர்ச்சி P2

# “வேலுகுமாரை இணைத்துக்கொள்வதில்லை என சஜித் உறுதி”



பொதுத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் ஞாயிற்றுக்கிழமை (29) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# பேக்கரி பொருட்களின் விலையில் மாற்றமில்லை

முட்டையின் விலை குறைக்கப்பட்டாலும் முட்டை தொடர்பான பேக்கரி பொருட்களின் விலையைக் குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலையில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் திருத்தப்படும் என அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

# “நீதி, நல்வாழ்வுக்காக துணிந்து குரல் கொடுத்தவர்”



நீதிக்காகவும், மக்களின் நல்வாழ்வுக்காகவும் என்றும் துணிந்து குரல் கொடுத்த ஒரு அரசியல்வாதி குமார வெல்கம என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.


முன்னாள் அமைச்சர் குமார வெல்கம அவர்களின் இழப்பு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தொடர்ச்சி P2

# பஸ் உரிமையாளர் மீது வாள் வெட்டு

யாழ்ப்பாணம் - மணியம்தோட்டம் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில், வாள்களுடன் முகமூடி அணிந்த நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்று பஸ் உரிமையாளரை வாள்களால் தாக்கியதாக யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2




# “அரசியல் அதிகாரத்தைப் பெறும் வேலைத்திட்டங்கள் எம்மிடம் இல்லை”





இன்று நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி பக்க பலத்தை வழங்கும். எமது நாடும் இங்கு வாழும் 220 இலட்சம் மக்களும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளதால் ஐக்கிய மக்கள் சக்தியின் பயணம் நேர்மறையாகவும் முற்போக்கானதாகவும் இருக்கும்.

தொடர்ச்சி P2

# “கட்டுப்பாட்டு விலையில் அரிசி வழங்க முடியாது”



கட்டுப்பாட்டு விலையில் அரிசி வழங்க முற்பட்டால் வியாபாரம் முற்றாக வீழ்ச்சியடையலாம் என சிறிய மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “பிரிந்தவர்கள் மீண்டும் இணையுங்கள்”

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் சனிக்கிழமை (28) வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. அதன் பின்னர், நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும், விசேடமாக ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான விடயங்கள் மற்றும் பாராளுமன்ற தேர்தல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி எடுத்த மூன்று தீர்மானங்களுக்கு மாறாகச் செயற்பட்டவர்களிடம் விளக்கம் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டது.

ப.அரியநேத்திரனை கட்சியில் இருந்து விலக்குமாறு பலமான கருத்துக்கள் சொல்லப்பட்டாலும், சில விடயங்கள் தொடர்பாக அவரிடம் விளக்கத்தினை கேட்டுவிட்டு தீர்மானங்களை எடுப்பதாக முடிவெடுக்கப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களுடைய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் விசேடமான அறிவிப்பு ஒன்றை மனம் உவந்து விடுக்கின்றோம்.

தமிழ்த் தேசியப் பரப்பிலே இருக்கின்ற, விசேடமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்து வெவ்வேறு காலகட்டங்களில் விலகிச்சென்ற கட்சிகளை மீண்டும் எங்களுடன் இணைந்து தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்று வினயமாக ஒரு அறிவிப்பு விடுக்கின்றோம். சவால் மிக்க ஒரு சூழலில் இந்த தேர்தல் இருப்பதனால் இணங்கி வந்து இந்த தேர்தலுக்கு முகங்கொடுக்குமாறு இரு கரம் நீட்டி அழைக்கின்றோம்.

அந்த வகையில், தமிழரசுக் கட்சியின் பெயரிலும் அதன் சின்னத்திலும் தான் நாங்கள் கடந்த காலங்களில் தேர்தலில் போட்டியிட்டிருந்தோம். அவ்வாறே இந்த தேர்தலிலும் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம்.

அந்த அழைப்பை ஏற்று வந்தால் மிக விரைவாக நாங்கள் பேச்சுவார்த்தை மூலம் வேட்பாளர்களை நிறுத்தும் விடயங்களை இணைந்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம். அடுத்துவரும் ஒரு சில நாட்களில் அவர்களின் பதிலை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அவ்வாறு இணங்கி வராவிட்டால் தமிழரசுக் கட்சி தனித்தும் போட்டியிடும். அத்துடன் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் விசேட கரிசனை ஒன்று வெளிப்படுத்தப்பட்டது.

ஒரு உறுப்பினரே அங்குத் தெரிவு செய்யப்படும் சூழ்நிலை இருப்பதால் அந்த விடயங்களை அந்தந்த மாவட்டக் கிளைகளோடு பேசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரலாம் என தீர்மானித்திருக்கின்றோம்.

அத்துடன், இந்த தேர்தலில் வட கிழக்குக்கு வெளியே தலைநகர் உட்பட தமிழர்கள் வாழ்கின்ற ஏனைய சில மாவட்டங்களிலும் போட்டியிடுவது தொடர்பாகவும் பரிசீலனை செய்வதாக எமது மத்தியக் குழு தீர்மானித்துள்ளது

இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக வேறு பல கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டபோதும், எமது சின்னத்திலும் பெயரிலுமே தேர்தலில் போட்டியிட்டோம். பிரதான கட்சி என்ற வகையிலேயே இந்த அழைப்பை விடுக்கின்றோம்.

வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாகச் சரியான அணுகலை நாங்கள் மேற்கொள்வோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. எனவே இளைஞர்கள், ஆற்றல் உள்ளவர்கள், படித்தவர்கள், பெண்கள் என்று அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யும் வகையிலேயே வேட்பாளர் தெரிவு இடம்பெறும்.

அதனை ஆராய்வதற்காக நியமனக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. அந்த குழு இறுதி முடிவுகளை எடுக்கும். மாவட்ட ரீதியாகக் கலந்தாலோசித்து அந்த முடிவுகளை எடுப்போம் என்றார்.

# “நாங்கள் போக முடியாது”

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் பொதுச்சபை கூட்டம் வவுனியா விருந்தினர் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினோம். தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்பது நாங்கள் தொடர்ச்சியாகக் கூறி வருகின்ற விடயம். ஒரு கட்சி மற்ற கட்சியின் மீது ஆதிக்கம் செலுத்துவதை விடுத்து உண்மையான கூட்டாக செயற்படவேண்டும்.

அன்று தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் நாங்கள் கூட்டமைப்பாக செயற்பட்ட போது, பல பிரச்சினைகள் உருவாகியிருந்தது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தாங்கள் தனியாகப் போட்டியிடப்போவதாகத் தமிழரசுக் கட்சி முடிவெடுத்திருந்தது. அதன் பின்னர் சம்பந்தருடன் நாங்கள் கலந்துரையாடச் சென்றபோதும், அவர் மிகத்தெளிவாக அதேகருத்தைச் சொல்லியிருந்தார். நீங்கள் தமிழரசுக் கட்சியை இல்லாமல் செய்ய பார்க்கிறீர்களா என்றும் அவர் சொன்னார்.

இருப்பினும், கூட்டமைப்பை விட்டு தமிழரசுக் கட்சி சென்றாலும் நாங்கள் இயங்காமல் இருக்கமாட்டோம் தானே. அப்படி இருக்கவும் கூடாது. எனவே, நாங்கள் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக உள்ளூராட்சி தேர்தலில் வேட்பு மனுவைத் தாக்கல்செய்தோம். இப்போது பல கட்சிகள் இணைந்திருக்கின்றது.

அவர்கள் தான் விட்டுச் சென்றவர்கள் எனவே, அவர்கள்தான் வரவேண்டும். அவர்கள் வந்தால் எமது கட்சிகளோடும், சிவில் அமைப்புகளின் கூட்டோடும் கலந்துரையாடியபின்னரே முடிவினை எடுக்கலாம். தனிப்பட்ட முறையில் சொன்னால் அவர்களது வரவு இந்த கட்டமைப்பைப் பெரிதாக்கும். அது எனக்கும் விருப்பம்.

அனைவரும் இணைவது தமிழ்மக்களுக்கு பலமாகவும் இருக்கும்.

ஆனால் அவர்கள் சொல்லியிருப்பது தமிழரசுக் கட்சி சின்னத்தில் என்று. இது பழையபடி தமிழரசுக்கட்சிதான் முடிவெடுக்கப்போகின்றது என்ற அடிப்படையிலும், ஆதிக்கம் தமிழரசுக் கட்சியினுடையதே நீங்கள் சேருங்கள் உங்களுக்கு நாங்கள் பார்த்துத் தருவோம் என்றவாறான ஒரு நிலைப்பாட்டையே கூறியிருக்கிறார்கள். அப்படியான நிலைப்பாட்டில் நாங்கள் போகமுடியாது. அனைவரும் சமபங்காளிகளாக ஒரு கூட்டமைப்பாக இணைந்தால் அதில் சேரமுடியும். அதற்கான நேரகாலம் இருக்கிறதோ தெரியாது. அவர்கள் மூன்று நாட்களையே அவகாசமாகக் கொடுத்துள்ளனர்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சங்கு சின்னத்தை எடுப்பதற்கான ஒரு அபிப்பிராயம் இருந்தது. அதற்கான முயற்சியினை செய்வதாகத் தீர்மானித்திருக்கின்றோம் செய்வோம்.

அத்துடன், இளைஞர்களையும் நிச்சயமாக உள்ளே கொண்டுவர வேண்டும். அதேபோல, அனுபவம் உள்ளவர்களும் இருக்கவேண்டும். இருந்தாலும் அப்படி ஒரு கருத்தாக்கம் மக்கள் மத்தியில் இல்லை. தேர்தலில் தாங்கள் போட்டியிடுவதற்காகச் சிலர் உருவாக்கும் ஒரு கருத்தே இது. இது கட்சிகளைப் பலவீனப்படுத்துகின்ற ஒரு விடயம். நாங்கள் கடந்த முறையும் இளைஞர்களை நிறுத்தியிருந்தோம். இப்போதும் நிச்சயமாக இளைஞர்கள் கேட்பார்கள்.

தமிழ் கட்சிகள் பிரிந்து நிற்பது பிரதிநிதித்துவத்தில் நிச்சயமாகத் தாக்கத்தை ஏற்படுத்தும். அதற்காகவே ஒரு கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று பார்க்கின்றோம். சிலர் சேரமுடியாத நிலை இருக்கிறது, குறிப்பாக டக்ளஸ் தேவானந்தாவும் நாங்களும் சேருவது கஷ்டமான விடயம். அரசுடன் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இருந்தால் அரசாங்கம் சொல்வதையே சொல்லவேண்டிய சங்கடம் இருக்கிறது. எமது சார்பாகக் கதைக்க முடியாது. மௌனியாகவே இருக்கவேண்டும். அபிவிருத்தி பணிகள் செய்யலாம். ஆனால், 1956 இதற்குப் பின்னர் நியாயமான ஒரு தீர்வினை நோக்கியே தமிழ் மக்கள் வாக்களித்து வருகின்றனர் என்றார்.

# செலவினங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

அதுதொடர்பில் உடனடியாக உள்ளக கணக்காய்வொன்று நடத்தப்பட வேண்டுமெனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பணிப்புரை விடுத்தார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்களுடன் 2024.09.27 காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய,

பிரதமர் என்ற முறையில், எனது பொறுப்பில் உள்ள அனைத்து அமைச்சுக்களிலும் செய்யப்பட வேண்டிய மற்றும் இதுவரை செய்யப்படாத முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. குறிப்பாக விளையாட்டு அமைச்சில் பல முக்கிய விடயங்கள் தெரியவந்துள்ளன.

ஒரு அரசாங்கம் என்ற வகையில், பொது நிதியை விரயம் செய்தல், துஷ்பிரயோகம் செய்தல் குறித்து நாங்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறோம், செலவினங்களைக் கட்டுப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். எனவே விழாக்களுக்குச் செய்யும் வீண் விரயத்தைக் குறைக்க வேண்டும்.

அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ஒதுக்கீடுகள் மற்றும் செலவழிக்கப்பட்ட தொகைகள் குறித்த புள்ளிவிவரங்கள் அமைச்சிடம் உள்ளன. ஆனால் அந்த செலவினங்களின் முன்னேற்றம் குறித்து இதுவரை எந்த அவதானிப்பும் செய்யப்படவில்லை. செலவழித்த பணத்தில் என்ன நடந்தது என்பது பற்றி விரைவாக உள்ளக கணக்காய்வு ஒன்று செய்யப்பட வேண்டும்.

அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள பல்வேறு மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்துக் கண்டறிய நிறுவன ரீதியாகக் குழுக்கள் நியமிக்கப்படுவதில்லை. அதற்கான முறையான வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது.

மற்றுமொரு முக்கிய விடயம் இக்கலந்துரையாடலின் போது வலியுறுத்தப்பட்டது. விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் கடமைகளின் போது நிகழும் வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் குறித்துக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு விளையாட்டு அமைச்சிடம் முறையானதொரு திட்டம் இல்லை. எனவே, வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் குறித்துக் கண்டறிந்து விழிப்புணர்வை ஏற்படுத்தச் சரியான வேலைத் திட்டத்தைத் தயாரிக்குமாறு நான் தெரிவித்துள்ளேன்” என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவித்தார்.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே. மகேசன் மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனைத்து பிரிவுகளின் தலைவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மீள் திருத்தத்திற்கான விண்ணப்பம் கோரல்

இம்முறை நாடளாவிய ரீதியில் 452,979 விண்ணப்பதாரர்கள் பங்குபற்றியதோடு, சாதாரணதரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் 3,527 நிலையங்களில் நடைபெற்றுள்ளது.

387,648 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 65,331 தனியார் விண்ணப்பதாரர்களும் இதில் உள்ளடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெளியாகியுள்ள பெறுபேறுகள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற விரும்பினால், 1911 அல்லது 011 2 785 922, 0112 786 616, 011 2 784 208 அல்லது 011 2 784 537 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்குமாறும் பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

# “வேலுகுமாரை இணைத்துக்கொள்வதில்லை...

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற கலந்துரையாடலில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் தான் கலந்து கொண்டதாகவும் இதன்போது , பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட விருப்பம் தெரிவித்ததாகவும் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியில் இருந்து விலகிய கண்டி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரை ஐக்கிய மக்கள் சக்திக்கு இணைத்துக்கொள்ள மாட்டோம் என சஜித் பிரேமதாச உட்பட அக்கட்சியின் தலைவர்கள் தமது கூட்டணிக்கு உறுதியளித்துள்ளதாகவும் பழனி திகாம்பரம் குறிப்பிட்டார்.

# “நீதி, நல்வாழ்வுக்காக துணிந்து குரல் கொடுத்தவர்”

“இலங்கை அரசியலில் துணிந்து, கருத்துக்களால் எதனையும் எதிர்கொள்ளக்கூடிய அரசியல்வாதியான குமார வெல்கமவின் இழப்பு குறித்து எனது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

முன்னாள் அமைச்சரும், சக பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம, மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியதுடன், அப்பிரதேசத்தில் வாழும் மூவின மக்களினாலும் விரும்பக்கூடியவராக இருந்து வந்துள்ளார்.

இதேவேளை, முஸ்லிம்கள் செறிந்துவாழும் வெலிகம பகுதி மக்களின் அதிகப்படியான வாக்குகள், கடந்த தேர்தல்களில் குமார வெல்கமவுக்கு அளிக்கப்பட்டமையானது, அப்பிரதேச முஸ்லிம்களுடன் அவருடைய நல்லிணக்கத்தினை எடுத்து காட்டுகின்றது.

மக்களின் நன்மைக்காக, தான் வகிக்கும் அமைச்சுப் பதவியினைக் கூட விட்டுவிட்டு, சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக இருந்து, துணிந்தும் அச்சமின்றியும் பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் தமது ஆழமான கருத்துக்களைத் தெரிவித்து வந்த ஒரு அரசியல்வாதியாக, அமரர் குமார வெல்கமவை காணமுடியும்.

அவர் சுகயீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், தமது 74 வயதில் மரணமாகியுள்ளார்.

அன்னாரது இழப்பினால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினர்கள் மற்றும் அவரின் ஆதரவாளர்களுக்கு எனது ஆழ்ந்த கவலையினை தெரிவித்துக்கொள்கின்றேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# “அரசியல் அதிகாரத்தைப் பெறும் வேலைத்திட்டங்கள் எம்மிடம் இல்லை”

நாசகார வேலைகள் மூலம் நாட்டை பலவீனப்படுத்துவதற்கோ அல்லது செயலிழக்கச் செய்து அரசியல் வெற்றியைப் பெறுவதற்கோ பொதுத் தேர்தலில் நாம் மக்கள் ஆணையைக் கோரவில்லை. நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்திற்கான கொள்கைகளை உருவாக்கவும், மக்களுக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்குமே நாம் மக்கள் ஆணையைக் கோரி நிற்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சுருங்கி வரும் பொருளாதாரத்தில் மக்கள் பல பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். மக்களின் வாழ்க்கை கடினமாகிவிட்ட நிலையில் இலட்சக்கணக்கான மக்கள் வெளியில் சொல்ல முடியா ஏழ்மையைச் சந்தித்து வருகின்றனர். கிராமப்புற, நகர்ப்புற மற்றும் தோட்ட வறுமை அதிகரித்து வருகிறது. இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய கொழும்பு தேர்தல் தொகுதி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களது தலைமையில் சனிக்கிழமை (28) மத்திய கொழும்பு கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஏற்பாடு செய்திருந்த இச்சந்திப்பில் மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியைச் சேர்ந்த கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பிட்டதொரு கொள்கையின் மூலம் வறுமையை ஒழித்து, பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும். பொருளாதார வளர்ச்சியில் இருந்து நாட்டு மக்கள் பயன்பெறும் திட்டம் இதில் அமைந்து காணப்படுகிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் பயணத்தில் நேர்மறையான இலக்குகள் உள்ளன. பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் மற்றும் ஒய்வூதியம் பெறுவோர் உட்பட சமூகத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சியான மற்றும் பொருளாதார ரீதியாக வலுவான வாழ்க்கையை ஏற்படுத்தும் பொறுப்புக் கூறல் இதில் அமைந்து காணப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

நாம் பின்னடைவைச் சந்தித்தாலும், இந்த நாட்டுக்கு வர எதிர்பார்த்திருக்கும் அனைத்து முதலீட்டாளர்களுக்கும் அழைப்பு விடுத்து பூரண ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவோம். அன்னிய நேரடி முதலீடுகளை வலுப்படுத்தி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்போம். ஏற்றுமதி துறையை இலக்கு வைத்து தொழில் முயற்சிகளைத் தொடங்குவோருக்குப் பூரண ஆதரவை வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

வெறுப்பு மற்றும் பொறாமைத்தன அரசியல் எங்களிடம் இல்லை. அரசியலில் பின்னடைவைச் சந்தித்தாலும், பொறாமைத்தன, வெறுப்பு அரசியல் என்னிடம் இல்லை. அனைவரும் கைகோர்த்து நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்திற்குப் பக்க பலத்தை வழங்க நாமனைவரும் முன்வருவோம் என்றார்.

# ‘யுக்திய’ நிறுத்தம்

அனைத்து டி.ஐ.ஜி.க்கள் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு இது குறித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

யுக்திய பணிகளுக்கு சிறப்பு அதிகாரிகளை ஈடுபடுத்தியதால், பொலிஸ் நிலையங்கள் மற்றும் பிரிவுகளின் கடமைகள் தடைப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக, பதில் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

# அரிசி வழங்க முடியாது”

கட்டுப்பாட்டு விலையில் அரசி வழங்குவதாக அரிசி ஆலை உரிமையாளர் டட்லி சிறிசேன தெரிவித்த கருத்து தொடர்பில், மரதகஹமுலவில் ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் மரதகஹமுல அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவர் பி.கே.ரஞ்சித் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

தற்போதைய நிலையில், நெல் கிலோ ஒன்றுக்கு 130 ரூபாய் தொடக்கம் 132 ரூபாய் வரையில் விலையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் கட்டுப்பாட்டு விலையில் அரிசி வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இம்முறை சிறிய வியாபாரிகள் ஒன்பது வீத வட்டிக்குப் பணம் வாங்கியே நெல் கொள்வனவு செய்துள்ளனர்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் சிறு ஆலை உரிமையாளர்கள் கட்டுப்பாட்டு விலையில் அரிசி வழங்குவது என்பது அவர்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாத காரணியாகும்.

டட்லி சிறிசேன இது தொடர்பில் என்னிடம் தெரிவித்தபோது எங்களால் அவ்வாறு செய்ய முடியாது என்று கூறினேன். இந்த நஷ்டத்தை ஜனவரி வரை தாங்கிக்கொள்ள சொல்லி விட்டார். ஆனால், சிறிய வியாபாரிகளால் எவ்வாறு செய்வது?

வியாபாரிகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் கட்டுப்பாட்டு விலையில் அரிசி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும், அது தொடர்பில் நாங்கள் நீண்ட காலமாகக் கூறி வருகிறோம்.

இவ்வாறான குறுகிய கால தீர்வை வழங்காமல் நீண்ட கால வேலைத்திட்டத்தின் ஊடாக கட்டுப்பாட்டு விலையில் அரிசியை வழங்குவதற்கு வழிவகை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அவ்வாறு இல்லாவிட்டால் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகளின் அரிசி ஆலைகள் வங்கிகளுக்கு உரித்தாக்கி விடும் என்று ரஞ்சித் வலியுறுத்தியுள்ளார்.

# பஸ் உரிமையாளர் மீது வாள் வெட்டு

வாள்வெட்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த நபர் யாழ் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாள்வெட்டுத் தாக்குதலில் பஸ் உரிமையாளரின் கைகளில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிசிடிவி காட்சிகள் ஊடாக சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்இ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பொதுத் தேர்தல் செலவுகள் தொடர்பில்

# ஜனாதிபதியின் தீர்மானம்




எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான செலவுத்தொகையாக எதிர்பார்க்கப்படும் 11 பில்லியன் ரூபாய் நிதியை விடுவிக்கும் உரிமத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கையொப்பமிட்டதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தகவல் வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான ஆரம்பக்கட்ட பணிகள் தொடர்பிலான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ராஜகிரியவில் உள்ள தேர்தல் செலகத்தில் சனிக்கிழமை (28) பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான ஆரம்பக்கட்ட செயற்பாடுகள் தொடர்பிலான இரு கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதி மாவட்ட செயலாளர்களின் பங்குபற்றலுடன் முதலாவது கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், இதில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க கலந்துகொண்டுள்ளார்.

இதேவேளை, மாவட்ட தேர்தல் அதிகாரிகள், உதவி ஆணையர்கள், பிரதி தேர்தல்கள் ஆணையாளர்களுடன் தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.













## சர்வதேச புத்தகக் கண்காட்சியை பார்வையிட்டார் ஜனாதிபதி அனுர

கொழும்பு-பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை (28) அன்று நடைபெற்ற 'கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியை' பார்வையிடச் சென்ற ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு மக்கள் விசேட வரவேற்பளித்துள்ளனர்.

இலக்கிய மாதத்தை முன்னிட்டு, 25ஆவது தடவையாக நடைபெற்ற இந்த புத்தகக் கண்காட்சியின்போது, இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்த இந்தீவர, சிறுவர் புத்தகங்கள் தொடர்பிலான தேசிய கொள்கைப் பத்திரத்தை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் வழங்கி வைத்துள்ளனர்.

சுமார் 400 புத்தக கூடங்கள் அமைக்கப்பட்டிருந்த புத்தகக் கண்காட்சியினை பார்வையிட சென்றிருந்த ஜனாதிபதி, மக்களோடு சிநேகபூர்வமாக கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகின்ற "கொழும்பு சர்வதேச புத்தக் கண்காட்சி" செப்டெம்பர் 27ஆம் திகதி முதல் ஒக்டோபர் 06ஆம் திகதி இரவு 9.00 மணி வரையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடத்தப்படவுள்ளது.

இதன்போது, பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி, கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உதார திக்கும்புர,பணிப்பாளர் சமந்தி ஜயசூரிய, மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இணை நிர்மாணப் பிரிவின் தலைவர் ருவன்திகா சேனநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

## கால்களை காணொளியாக்கிய இருவர் கைது

பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கால்களை காணொளியாகப் பதிவு செய்து அதனை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்த இரு இளைஞர்கள் (29) ஞாயிற்றுக்கிழமை அன்று கைது செய்யப்பட்டதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சிலாபம் பங்கதெனிய மற்றும் குமாரக்கட்டுவை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞர்கள் வேறொரு முறைப்பாட்டின் விசாரணைகளுக்காகக் கடந்த 27 ஆம் திகதி பொலிஸ் நிலையத்திற்கு வந்திருந்த நிலையில், கடமையில் இருந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் கால்களைக் காணொளியாகப் பதிவு செய்து அதனை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளனர்.

சமூக ஊடகங்களில் தனக்கு அவமானம் ஏற்படுத்தும் வகையில் காணொளி வெளியிடப்பட்டுள்ளதாகக் கூறி பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் அதிகாரி, உயர் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்த பின்னர் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இருவரையும் கைது செய்துள்ளனர்.

## வாழ்க்கைத்திறன் பயிற்சிப்பட்டறை

■ அஸ்ஹர் இப்றாஹீம்




மட்டக்களப்பு-புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலய மாணவர்களுக்கு மட்டக்களப்பு விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் வாழ்க்கை திறன் பயிற்சிப் பட்டறையொன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறை நேர்மறை எண்ணங்கள் மற்றும் ஊக்கப்படுத்தல் ஆகிய தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், விவேகானந்தா கல்லூரியின் பணிப்பாளர் க.பிரதீஸ்வரனின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அதிபர் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் முகாமையாளர் மற்றும் கல்லூரி சேவையாளர்கள் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டுள்ளனர்.

## சப்ரகமுவ ஆளுநர் பதவியேற்பு



■ சிவா ஸ்ரீதரராவ்

சப்ரகமுவ மாகாணத்தின் புதிய ஆளுநரான ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்ன வெள்ளிக்கிழமை (27) அன்று சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதி உள்ள ஆளுநர் அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

அதன் பின்னர் ஆளுநர் பெங்கமுவ தம்மதின்ன தேரர் உள்ளிட்ட சமயத் தலைவர்களையுமு சந்தித்து ஆசி பெற்றார்.

## இலட்சக்கணக்கில் பிடிக்கப்பட்ட மீன்கள்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு - கல்லடி கடலில் இலட்சக்கணக்கான நெத்தலி மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளதுடன், அதனைப் பெருமளவிலான மக்கள் பார்வையிட்ட வருகை தருகின்றனர்.

குறித்த மாவட்டத்தில் நிலவிவரும் கடும் வறட்சி காரணமாக நீர் நிலைகள் வற்றி வருகின்ற நிலையிலும் கடல் பிரதேசத்தில் இவ்வாறு அதிக அளவிலான மீன்கள் பிடிக்கப்பட்டமை குறித்து மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்

பல கரைவலைகள் மூலம் என்றும் இல்லாதவாறு இலட்சக்கணக்கான நெத்திலி மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த மீன்களை மீனவர்கள் மிகவும் குறைவான விலையில் விற்பனை செய்ததுடன் கருவாடாக மாற்றியும் வருகின்றனர்.

## சிறுமியை வன்புணர்ந்த சிறுவன் கைது

■ கனகராசா சரவணன்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் 16 வயது சிறுமியை 2 மாத கர்ப்பிணியாக்கிய 16 வயது சிறுவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறுமியின் தாயார் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ள நிலையில், சிறுமி அவரின் பாட்டியின் பாதுகாப்பில் இருந்து வந்துள்ளார்.

அதேவேளை, சிறுமியின் பக்கத்து வீட்டு 16 வயது சிறுவனின் தந்தை உயிரிழந்துள்ள நிலையில், அவரின் தாயாரும் வெளிநாட்டில் வேலை வாய்ப்புக்காகச் சென்றுள்ளதாகவும் குறித்த சிறுவனும் பாட்டியின் பாதுகாப்பில் இருந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், சிறுவன், சிறுமியுடன் ஒரே வகுப்பில் கல்வி கற்று வரும் நிலையில், கல்வி கற்பதற்காகச் சிறுவனின் வீட்டுக்கு சிறுமி சென்று வந்துள்ளார். இதன்போது, இருவருக்கும் ஏற்பட்ட காதல் காரணமாக சிறுவன் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, சிறுமிக்கு வயிற்று வலி ஏற்பட்டுள்ளது. அவரை வைத்தியசாலைக்குச் சென்றுள்ள நிலையில், சிறுமி 2 மாத கர்ப்பிணியாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, வைத்தியர் பொலிஸாருக்கு அறிவித்த நிலையில், சிறுமியை கர்ப்பிணியாக்கிய 16 வயது சிறுவனைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பசுவை வெட்டிய மூவருக்கு விளக்கமறியல்

யாழ். பொன்னாலை-கிருஷ்ணன் பகுதியில் வெள்ளிக்கிழமை (27) அன்று ஐந்து மாத கன்றுத்தாச்சி மாட்டை வெட்டி இறைச்சியாக்கிய பின்னர், அதன் கழிவுகளை அப்பகுதிகளில் வீசிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளில் ஈடுபட்ட பொலிஸார், சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், மல்லாகம் நீதவான் நீதிமன்றில் அவர்களை முற்படுத்திய வேளை அவர்களை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## குமார வெல்கம காலமானார்



களுத்துறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான குமார வெல்கம தனது 74 ஆவது வயதில் காலமானார்.

அண்மையில் குமார வெல்கமவுக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாகப் பாராளுமன்றத்தால் மூன்று மாத விடுமுறை வழங்கப்பட்டு, கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 1950ஆம் ஆண்டு ஏப்ரல் 05ஆம் திகதி பிறந்த வெல்கம, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகால உறுப்பினராக இருந்து, பின்னர் அதிலிருந்து விலகி நவ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரானார். 2020 பொதுத் தேர்தலில், அவர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவானார்.

மேலும் அவர், குமார வெல்கம 2007 முதல் 2010 வரை கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராகவும், 2010 முதல் 2015 வரை போக்குவரத்து அமைச்சராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதல் வாரம் இனிதே நிறைவு

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டி தெரிவாகிய அனுரகுமார திசாநாயக்க தனது முதல் வாரத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். தாம் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் முதல் வாரத்தில் செய்யக்கூடிய விடயங்களை செவ்வனே நிறைவேற்றியுள்ளார் என்றே குறிப்பிடலாம்.

முதல் வாரத்தில் இவர் நிறைவேற்றிய அம்சங்களில், பிரதமர் அடங்கலாக அமைச்சரவை நியமனம், பாராளுமன்ற கலைப்பு, அமைச்சுகளின் செயலாளர்கள் நியமனம், பதில் பொலிஸ் மா அதிபர் நியமனம், அநாவசிய செலவுகளைத் தவிர்த்திருந்தமை, சுற்றுலாப் பயணிகளுக்கான வீசா பெறும் நடைமுறையில் காணப்பட்ட சிக்கல்களை நீக்கி, நீதிமன்ற உத்தரவுக்கமைய, பழைய வீசா நடைமுறையை மீளறிமுகம் செய்திருந்தமை மற்றும் வீசா கட்டணங்களைக் குறைத்திருந்தமை, விவசாயிகளுக்கு உர மானியமாக 25,000 ரூபாயை வழங்க முன்வந்திருந்தமை மற்றும் மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்க முன்வந்திருந்தமை போன்ற மேலும் பல அம்சங்களை அவதானிக்க முடிந்தது.

அவற்றுடன் கொழும்பில் சில வருடங்களாக மூடப்பட்டிருந்த இரு வீதிகளை மீளத் திறந்து மக்களின் போக்குவரத்து வசதி வாய்ப்புக்கு வலுச்சேர்ந்திருந்தமையும் வரவேற்கத்தக்கது.

இந்நிலையில், ஜனாதிபதியினால் ஆற்றப்பட்ட பொது மக்கள் மத்தியிலான முதலாவது உரையும், கடந்த கால ஜனாதிபதிகளின் உரைகளைப் போலல்லாது, நடைமுறைச் சாத்தியமானதாகவும், எளிமையானதாகவும் அமைந்திருந்தது. தாம் ஒரு மெஜிக் வித்தகர் அல்ல என்பதையும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டிருந்தார். இதனை அவருக்கு எதிரான சில குழுவினர் கிண்டல் செய்யும் வகையிலும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்தனர்.

பொதுத் தேர்தல் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேசிய மக்கள் சக்தி அதில் எந்தளவு பாராளுமன்ற ஆசனங்களைப் பெறும் என்பதில் ஜனாதிபதி தலைமையிலான இடைக்கால அமைச்சரவை எதிர்வரும் வாரங்களில் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் பெரும் தாக்கம் செலுத்தும். குறிப்பாக, அவருக்கு எதிராக இதர கட்சிகள் கூட்டுச் சேருவது தொடர்பில் பல்வேறு மட்டங்களில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் நிலையில், மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்கு, ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி அனுரகுமார அடங்கலாக அமைச்சரவை எந்த விதத்தில் இனிவரும் நாட்களில் இயங்கும் என்பது முக்கியமானது.

ஆட்சியிலிருந்த முன்னைய அரசியல்கட்சிகளை போலன்றி, மக்கள் மத்தியில் ஊழலை ஒழிப்பது, நாட்டை முன்னேற்றுவது தொடர்பான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சி பீடமேறியுள்ள தேசிய மக்கள் சக்தி, தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவது அவர்களுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் உகந்தது.

கடந்த பாராளுமன்றத்தில் வெறும் 3 ஆசனங்களை மாத்திரமே பெற்றுக் கொண்ட தேசிய மக்கள் சக்தி, இம்முறை 120 ஆசனங்களைப் பெறும் என அரசியல் விமர்சகர்களால் எதிர்வு கூரப்பட்டுள்ள நிலையில், சில வாரங்களில் அது எந்தளவு சாத்தியமானது என்பது உறுதியாகிவிடும். ஜனாதிபதி சிம்மாசனத்தில் அனுரகுமார திசாநாயக்க முதல் வாரத்தை இனிதே நிறைவு செய்துள்ளார்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ஒற்றுமைக்கான அழைப்பை ஏற்றல்

லக்ஸ்மன்

இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு செயற்படப் போவதாக சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்ற அக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு தமிழரசுக் கட்சியின் தனிப்பட்ட தீர்மானமாகவே பொது வெளியில் பார்க்கப்படுகிறது. இத் தீர்மானத்துக்கான முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற தமிழரசுக் கட்சியால் எவ்வாறு எடுக்கப்படமுடியும் என்பது இந்த இடத்தில் கேள்விதான்.

எது எவ்வாறானாலும், தமிழ்த் தேசியம் பலப்படுதலொன்றே காலத்தின் தேவை என்பதனை உணர்ந்துகொள்ளத் தலைப்படுதலை முக்கியப்படுத்தல் வேண்டும்.

தனிப்பட்ட கோப, தாபங்களையும், வெப்பு சாரங்களையும் காண்பிப்பதற்கான இடமாகத் தமிழ் அரசியல் தளத்தினைப் பயன்படுத்தும் தனிப்பட்ட நலனினை மாத்திரம் முதன்மைப்படுத்துபவர்கள் எவ்வாறு தமிழ்த் தேசிய அரசியல் பற்றிப் பேச முடியும் என்பதனைக் கேள்வியாக எழுப்புவதற்கு மக்கள் மத்தியில் ஏதுக்கள் எதனையும் காணமுடியவில்லை. அது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள சலிப்பும் காரணமாக இருக்கலாம்.

தமிழர்களின் தேசியம் என்பது உணர்வு ரீதியானதே! இந்த உணர்வினை சரியாகக் கைக்கொள்ளவும் கையாளவும் தெரியாதவர்களாகவும், அதனைப் பற்றிப் புரிந்துகொள்ள முயலாதவர்களாகவும் தமிழர்கள் இருக்கிறார்கள் என்பது பல தடவைகளில் நிரூபணமாகி விட்டாலும், அதனை ஏற்றுக்கொள்ள யாரும் தயாரில்லை.

இந்த யதார்த்தத்தினை உணராது நடந்து கொள்வதுதான் தற்போது தமிழ்த் தேசியம் பற்றிப் பேச முனைபவர்களின் நிலையாக இருக்கிறது என்பது பெரும் குறையே.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக சிவஞானம் சிறிதரன் தெரிவு செய்யப்பட்டார். தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமை அரசியல் இதிலிருந்து தொடங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழ்த் தேசியம் சார்ந்து சிந்திப்பவர்களிடம் பொதுவாக இருந்தது என்னவோ உண்மைதான்.

ஆனால், சுமந்திரன் அணியினர் அதனை நிர்மூலமாக்கி வழக்குத் தொடர்ந்து அவருடைய தலைவர் பதவியை வறிதற்றதாக்கியிருந்தனர். அதன் பின்னர் உருவான தேர்தல் அரசியல் களத்தில் தமிழ்ப் பொது ஜனாதிபதி வேட்பாளர் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பினால் களமிறக்கப்பட்டார்.

அந்தக் களமிறக்கலிற்குப் பாதகம் ஏற்படுத்தாது ஒதுங்கியிருக்கும் நிலைப்பாட்டை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எடுத்திருக்கலாம்.

ஆனால், நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து பொது வேட்பாளரான அரியநேத்திரன் விலக வேண்டும் என்று அக் கட்சி அறிவித்தது. அது தவிரவும் மாற்றம் பெற்றுக் கொண்டிருக்கின்ற அரசியல் களத்தினைப் புரிந்து கொள்ளாது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்தது.

தமிழ் மக்களது அரசியலுரிமைக்கான அரசியலை நடத்துவதற்குப் பதிலாகத் தொடர்ச்சியாகவும் எனக்கு இரண்டு கண்ணும் போனாலும் பரவாயில்லை. எதிரிக்கு ஒரு கண்ணேனும் போகவேண்டும்.

சகுனப் பிழையாயினும் ஏற்படவேண்டும் என்று சிந்திக்கின்ற தூற்றி, விமர்சித்து, அவமானங்களுக்கு உட்படுத்துவது என தொடரும் அரசியல் நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியலில் மாத்திரமல்ல, தேசிய அரசியலிலும் ஒவ்வொரு கட்சியிலுமிருக்கின்ற ஒரு சிலரே தீர்மானிக்கின்ற நிலைமைக்கப்பால் மக்களின் அரசியல் உரிமை, நலன்களை முக்கியப்படுத்துகின்ற தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாடு ஒன்று உருவாக்கப்படவேண்டும். அது அரசியல் கள நிலைமைகளை உணர்ந்து முன்னெடுக்கவும்பட வேண்டும்.

அல்லாது போனால் நீண்டகாலத்தில் எதுவும் பயனற்றதாகிப்போய் தமிழ்த் தேசிய அரசிலை தேவையில்லை என்ற முடிவினையே மக்கள் எடுத்துவிடுவார்கள்.

சுயநலன்களுக்கப்பால் மக்களுக்கான அரசியல் முதன்மைப்படுத்தப்பட வேண்டும் என்பது சுட்டிக்காட்டத்தக்கதாக இருந்தாலும், அண்மைய காலங்களாகத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமை பற்றிய பேச்சுக்கள் எழுந்தாலும் அதனை மேவும் வகையில் போராட்ட ஆயுத இயக்கங்களாக இருந்து அரசியல் நீரோட்டத்துக்குள் இணைந்தவர்களை விமர்சிக்கின்ற நிலை உருவாகியிருக்கிறது.

இது காலத்தின் தேவையற்றது என்பதும், இது மேலும் தமிழ்த் தேசிய அரசியலில் முரண்பாட்டை ஏற்படுத்தும் என்பதும் மறக்கப்பட்டதனால் நடைபெறுவதாகவே உணர முடிகிறது. இது ஒருவகையில் கற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து இன்னமும் தமிழ்த் தேசிய அரசியலைச் செய்துகொண்டிருப்பவர்கள் கற்றுக் கொள்ளத் தலைப்படவில்லை என்பதனையே புலப்படுத்துகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அனைவரும் ஒரே நோக்கத்திற்காகவே போராடத் தொடங்கியிருந்தனர். சகோதர இயக்க எதிர்ப்பு, படுகொலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பலனாக உருவான பல விரோதச் செயல்கள் பலராலும் மறக்கப்பட முடியாதவை என்பதனை யாரும் மறுக்கமாட்டார்கள்.

ஆனால், 2001ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் தலைவர் கடந்தகால செயற்பாடுகளை, தவறுகளை மறப்போம், மன்னிப்போம் என்ற அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் என்ற முடிவினை மேற்கொண்டிருந்தார்.

இதனை யாரும் மறுப்பதற்கில்லை. மீண்டும் மீண்டும் பழைய விடயங்களைத் தூண்டி வீணான விமர்சனங்களுக்குள் செல்வது அரசியல் மயப்படுதலில் தடைக்கல்லாகவே இருக்கும்.

காலம் கடந்த முடிவுகள் பல தமிழ்த் தேசிய அரசியலில் நடைபெற்றே இருக்கின்றன. இவற்றினால் விளைந்த பயன் ஒன்றுமில்லை.

திம்புப் பேச்சின் ஊடாக அதன் பின்னர் 13ஆவது திருத்தம், வடக்கு கிழக்கை முதன்மைப்படுத்திய மாகாண சபை முறைமை, சந்திரிகா அம்மையாரின் இடைக்கால சபை, அதன் பின்னர் ஒஸ்லோ பிரகடனம் என பல வாய்ப்புகள் வீணானதே நம் வரலாறு என்று ஒரு சிலர் கருத்து வெளியிட்டாலும் சுதந்திர வடக்கு கிழக்கு என்ற கோதாவிலேயே தொடர்ச்சியாகத் தமிழ் அரசியல் முன்னெடுப்புகள் அமைந்திருந்தன. ஆனால், அதனால் பயனேதுமில்லை.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக நடந்து முடிந்து விட்டிருக்கின்ற தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தில் மேலும் மேலும், முரண்பாடுகள் வளர்ந்துகொண்டு செல்வது காலத்துக்கேற்றதல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழர்களுக்கான அரசியல் செயற்பாட்டுக்கானதாக ஆக்கி ஆரம்பத்தில் உதய சூரியன் சின்னம் தீர்மானிக்கப்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை இணைந்து 2001 தேர்தலில் போட்டியிட்டன.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 22 பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தினை பெற்றுக்கொள்ள முடிந்திருந்தது. ஆனால், அதனை அடுத்த தேர்தல்களிலிருந்து தொடங்கிய கட்சி விலகல்களால் அப் பிரதிநிதித்துவங்கள் குறைவடையவே தொடங்கியிருந்தது.

இறுதியாக நடைபெற்ற தேர்தலில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் 10 ஆசனங்களையே பெற்றுக் கொள்ளமுடிந்திருந்தது, அதற்கு ஒற்றுமைக் குலைவே காரணமாகும்.

இதனை முதலில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

உதய சூரியன் சின்னத்தில் ஏற்பட்ட பிரச்சினையாலேயே, 1976களிலேயே கிடப்பில் போடப்பட்டிருந்த வீட்டுச் சின்னம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது.

அச்சின்னம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் சின்னமாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் அதனை தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. இது பெரும் முரண்பாடாகத் தொடர்ந்து கொண்டே இருந்தது.


இறுதியில் கடந்த வருடம் அக்கட்சி தனிவழி சென்றது. ஆனாலும், அவர்கள் இணைய வேண்டும் என்ற வேண்டுகோள்கள் வராமலில்லை. இந்நிலையிலேயே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எம்மோடு இணையுங்கள் என்ற வேண்டுகோளை வெளியிட்டுள்ளனர்.

சிலவேளைகளில் அவ்வாறான ஒரு இணைவு ஏற்படுவதாக இருந்தால் வீட்டுச் சின்னம் பொதுச் சின்னமாக மாற்றப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மாறுவதனையே அனைவரும் விருப்பங்கொள்வர். இந்த விருப்பத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி இடம் கொடுக்குமா என்பது தமிழ் அரசியல் களம் இடம் கொடுக்கவேண்டும்.

பார்த்துக் கொள்வதற்கு ஆள் இருந்தவேளையில், இருந்த ஒற்றுமையை 2009க்குப் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏகாதிபத்திய தமிழ்த் தேசிய அரசியலை நடத்த முனைந்தமையால் ஏற்பட்ட பிரச்சினைக்கு இலங்கை தமிழரசுக் கட்சி என்ன முடிவினை வழங்கும் என்பதிலேயே தமிழ் மக்களின் தேசிய அரசியல் தங்கியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் தங்களது கடந்தகால தவறுகளை மறந்து ஏனைய போராட்ட இயக்கங்களையும் இணைத்து தமிழர்களின் தேசிய அரசியல் நடைபெறவேண்டும் என்று எடுத்த முடிவினை அனைவருக்கும் சமமான அந்தஸ்த்தும் அதிகாரமும் இருக்கக் கூடியதான தமிழ்த் தேசிய அரசியலுக்குக் காலத்துக்கேற்ற முடிவாக இருக்கும்.

மீண்டும் மீண்டும் பிரிவுகள் இல்லாத தமிழர்களின் நீண்டகால அரசியல் போராட்டத்திற்கான தீர்வு, எதிர்கால நலன், விட்டுக் கொடுப்பு, அனுசரிப்புடன் கூடியதாக அது இருக்கவும் வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

சேமித்தேயாகவேண்டும் என்கிற கட்டாயத்தை மனதில் நிறுத்துக. சிறிய சேமிப்புகளே பெரும் தொகையாகின்றது. எந்தச் செல்வந்தர்களும் மனம் போனபடி, செலவு செய்தால், அவர்களும் பரிதாபநிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

கண்டபடி செலவு செய்தல், கௌரவத்தைத் தேடுவதற்கே என்பது உண்மையானது. எவரோ பாராட்ட வேண்டும். தங்கள் பணத்தைக் காட்ட வேண்டும் என்பதற்காக, வேண்டாத செலவுகளைச் செய்வது வீண் ஆபத்துகளுக்கே வழிவகுக்கும்.

தான, தர்மம் புனிதமானது; அதைச் செய்வதற்கு உங்கள் வசதி இருப்புகளையும் நோக்க வேண்டும். தற்போதைய நிலையில், ஆதரவு அற்றவர்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யவேண்டும்.

அதேசமயம் உங்களுக்கும் குடும்பத்துக்கும் தேவைகள் உண்டு. எதிர்காலத்தில் பிள்ளைகளுக்கான வசதிகள் முக்கியமானது கல்வி ஆகும். போசாக்கான உணவு, மனைவி, பிள்ளைகளுக்கான மருத்துவ, சுகாதார செலவு, படிப்புச் செலவுகளுக்கான நூல்கள், அத்தியாவசியத் தேவைகள் உண்டு.

இத்தகைய செலவுகளை எதிர்கொள்ளச் சிக்கனமே அவசியம். இதனால் கிடைப்பது மகா பாக்கியம். பொதுநலனும் சுயநலனும் இணைந்ததே வாழ்க்கை.

நன்றி -பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்

டயகம-லிந்துலை பிரதான வீதி 2014ஆம் ஆண்டு புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

அத்துடன், டயகம - ஆட்லி தோட்டத்தை அண்மித்துள்ள பகுதியையும் அகலப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.


இதனால் அப்பகுதியில் உள்ள 10 வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டு கூறைகள் சேதமடைந்து காணப்படுகின்றது.

மேலும், இரவு நேரங்களில் குறித்த வீடுகளில் உறங்கக் கூட முடியாமல் மழைநீர் வடிவதால், தாம் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதி மக்கள் இதுவரை வீடுகள் அமைத்துக் கொடுக்கவில்லை. மேலும், மலசலக்கூடம், குடிநீர் பாதை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கும் தொடர்ந்து முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே, உரிய அதிகாரிகளால் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் பாதிப்பிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு ஆட்லி தோட்டத்தைச் சேர்ந்த தோட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- மஸ்கெலியா நிருபர்



## யானைக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவினை சித்திரிக்கும்

# The Elephant Wisperers

கனிஸ்ரா ஜெயகாந்தன்,
ஊடக கற்கைள்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

"நான் காட்டு நாயக்கன், காட்டு நாயக்கன் என்றால், நான் காட்டிலேயே பிறந்து, வளர்ந்து பெரியாவனானேன் என்பது அதன் பொருள். இனிமேலும் நாங்கள் காட்டில்தான் இருப்போம்"

என்று கனத்த குரலில் பொம்மன் கதாபாத்திரத்தைக் காண்பிப்பதுடன் ஆரம்பமாகின்றது *The Elephant Wisperers* என்ற இந்திய ஆவணப்படம். குனீத் மோங்கா தயாரித்து கார்த்திகி கோன்சால்வ்ஸ் இயக்கிய இந்த ஆவணப்படமானது *'The best documetey short OSCARSS 95 gpuptpy'*

95 பிரிவில் 2023ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட ஆவணப்படமாகத் திகழ்கின்றது.

இந்தியாவின் முதுமலை காட்டில் உள்ள தெப்பாக்காடு யானைகள் முகாமை (ஆசியாவிலேயே பழமையான முகாம்) மையமாக வைத்து அதனைச் சுற்றிப் பயணிக்கிறது. 'தி எலிபென்ட் விஸ்பெரர்ஸ்' என்ற ஆவணப்படத்தின் கதைக்களம்.

தெப்பாக்காட்டில் வனத்துறை கண்காணிப்பில் குட்டி யானைகளைப் பராமரிக்கும் பணியில் இருந்து வருகிறார் பொம்மன். தாய் யானை மின்சாரம் தாக்கி இறந்து விட, உயிருக்கு ஆபத்தான நிலையில் கிடைத்த குட்டி யானையான ரகுவை வளர்க்கும் பொறுப்பு பொம்மனிடம் விடப்படுகிறது. பொம்மனும் அவருக்கு உதவியாக இருக்கும் பெல்லியும் சேர்ந்து ரகுவை மீட்டெடுக்கிறார்கள். இருவரிடம் பாசமாக வளர்கிறது ரகு. பொம்மன் - ரகுவை சக யானைகளின் வாழ்வை வாழக் காட்டுக்குள் விட்டாலும், ரகு அவற்றுடன் சேர மறுக்கிறது. ரகுவிற்கு பிறகு

அம்முக்குட்டி என்ற குட்டி யானையும் பொம்மன் - பெல்லியிடம் ஒப்படைக்கப்படுகிறது. ரகுவும், அம்முகுட்டியும், பொம்மன் - பெல்லியின் உலகமாக மாறுகின்றன. நால்வரும் குடும்பமாக மாறுகிறார்கள்.

பொம்மன் - பெல்லி திருமணம் என நாட்கள் நகர்கின்றன. இந்த நிலையில், வனத்துறையால் ரகு வேறு ஒருவரிடம் பராமரிப்புக்காக அழைத்துச் செல்லப்படுகின்றது. குழந்தையை இழந்தது போல, பொம்மனும் - பெல்லியும் உடைகின்றனர். எனினும், அம்மு குட்டியின் இருப்பு இருவரையும் ஆசுவாசப்படுக்கிறது. கைவிடப்பட்ட யானை குட்டிகளை வளர்ந்த முதல் தம்பதி என்று பொம்மனும் - பெல்லியும் அறியப்படுகிறார்கள்.

ரகு, பொம்மன், பெல்லி, அம்முகுட்டி என நால்வருக்கும் இடையேயான உணர்வைக் காட்சிகள் மூலம் தத்ரூபமாகவும், அதேவேளையில், மனிதர்களின் ஆக்கிரமிப்புகளால் வனவிலங்குகள் சந்தித்த, சந்திக்கும் இழப்புகளை ஆழமாகப் பதிவு செய்து இருக்கிறார் இயக்குநர் கார்த்திகி கோன்சால்வ்ஸ். படத்தின் ஒளிப்பதிவும், இசை, எடிட்டிங் என அனைத்தும் கச்சிதமாகப் பொருந்தியுள்ளன. அதற்கான அங்கீகாரமாகத்தான் 'தி எலிபென்ட் விஸ்பெரர்ஸ்' ஆஸ்கரில் ஆவணக் குறும்படப் பிரிவுப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆவணப்படத்தின் முடிவில், ரெட்டை குடும்பி அணிந்து கொண்டு அம்முகுட்டி நம்மிடமிருந்து சட்டென்று விடைபெறுகிறது. ஆனால், பார்வையாளர்களாகிய நமக்கு இப்படத்திலிருந்து முழுமையாக விடுபட சில நிமிடங்கள் தேவைப்படுகிறது. காரணம், இப்படத்தில் அவ்வளவு காதல் நிரம்பியிருக்கிறது.

இயக்குநர் கார்த்திகி கோன்சால்விஸ், விருதினைப் பெற்றுக்கொண்டு மேடையில் பேசுகையில், "நமக்கும் இயற்கைக்கும் இடையேயான புனித பந்தம் குறித்துப் பேச இன்று இந்த மேடையில் நிற்கிறேன். பழங்குடி சமுதாயத்தின் மரியாதை, மற்ற உயிரினங்கள்

**யானையை பிரிந்து அவர்களும் சாப்பாடு மற்றும் தண்ணீர் இல்லாமல் கவலையுடன் இருந்த காட்சிகள் மனதுக்கு மிக நெருடலை ஏற்படுத்திய காட்சிகளாக அமைந்திருந்தனர்**

**மனிதர்களைத்தாண்டியும் விலங்குகளுக்கும் அன்பு, பாசம, அரவணைப்பு தேவை என்பதை இந்த ஆவணப்படம் மிகத்தத்ரூபமாக காண்பித்து இருக்கின்றது**

மேல் அவர்கள் காட்டும் பரிவு, அனைத்து உயிர்களையும் ஒன்றிணைத்த இணக்கமான வாழ்வு போன்றவற்றுக்கு இந்த விருது. எங்கள் படத்தினை அங்கீகரித்ததற்கும் பழங்குடி மக்களை முன்னிலைப்படுத்தியதற்கும் அகாடமிக்கு என் நன்றிகள். இந்த விருதினை என் தாய்நாடான இந்தியாவுக்கு அர்ப்பணிக்கிறேன் என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இந்த ஆவணப்படமானது காட்டுநாயக்க மக்களின் வாழ்வியல், கலாசாரம், பண்பாடு, சமயநடைமுறைகள், வாழ்வியல்கோலம், வீடுகள், உணவு முறை போன்ற அனைத்து விடயங்களையும் பதிவு செய்துள்ளதுடன், மாத்திரம் அல்லாது, குறித்த காடும் அதனைச் சூழவுள்ள இயற்கையின் அழகினையும் இந்த ஆவணப்படத்தின் ஊடாக வெளிக்காட்டத் தவறவில்லை.

பார்வையாளரை ஈர்ப்பதற்காக இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள இயற்கையான ஒலி எம்மை குறித்த கதைச் சூழலுடன் இணைக்கச்செய்துள்ளது. இயற்கை ஒளி, ஒலி மற்றும் நிழல் போன்றவற்றைச் சரியாக உள்வாங்கி வகையில் இந்த ஆவணப்படத்தின் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அது மாத்திரம் அன்றி மிக முக்கியமாக யானைகள் பராமரிக்கும் தொழிலை எவ்வாறு சிறுவர்களுக்கு பழக்குகின்றனர். தலைமுறைகள் வழியாக எவ்வாறு பாரம்பரியங்கள் கடத்தப்படுகின்றன என்பதனையும் இந்த ஆவணப்படத்தின் துணைகொண்டு அறிய முடிகிறது.

அதிகமாக நாம் யானைகளால், மனிதனுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் பற்றியே அறிந்திருக்கின்றோம் ஆனால், இந்த ஆவணப்படத்தில் மனிதனால் யானைகளுக்கு ஏற்படும் ஆபத்துகள் பற்றியும் சொல்லப்படுகிறது.

யானையை வன பாதுகாப்பு திணைக்களம் ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்பட்ட போது, அவர்களைப் பிரிந்து யானையும், யானையை பிரிந்து அவர்களும் சாப்பாடு மற்றும் தண்ணீர் இல்லாமல் கவலையுடன் இருந்த காட்சிகள் மனதுக்கு மிக நெருடலை ஏற்படுத்திய காட்சிகளாக அமைந்திருந்தனர்.

இந்தக் காட்சிகளில் யானையின் கண்களில் இருந்து கண்ணீர் வந்த காட்சியை காண்பித்தமை இன்னும் அதிகமான கவலை உணர்வை எம்மிடம் இருந்து வெளிக்கொணர்ந்தது.

மனிதர்களுக்கு மாத்திரம் பாசம் என்பது இல்லை, மனிதர்களைத்தாண்டியும் விலங்குகளுக்கும் அன்பு, பாசம, அரவணைப்பு தேவை என்பதை இந்த ஆவணப்படம் மிகத்தத்ரூபமாக காண்பித்து இருக்கின்றது.

பழங்குடி மக்களின் எளிமையான வாழ்வியலுடன, இயற்கையின் அம்சங்களில் இணைத்து யானைகளுக்கும் மனிதர்களுக்கம் இடையேயான பாசத்தினை வெளிக்கொணர்ந்துள்ள இந்த ஆவணப்படம் தற்காலத்தின் மிகச் சிறந்த ஆவணப்படம் என்பதில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை.

# கொமர்ஷல் வங்கியின் மரங்கள் நடும் முயற்சி



கொமர்ஷல் வங்கியின் நிலைபெறுதகு தன்மையை மேம்படுத்துவதற்கான நாடளாவிய முயற்சியின் ஒரு பகுதியாக வட பகுதியில் அமைத்துள்ள மாவட்டங்களான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் 10,000 மரக்கன்றுகளை நடும் திட்டமொன்றை கொமர்ஷல் வங்கி ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 600 ஏக்கர் காணிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தின் ஊடாக செல்லும் ஏ9 வீதியின் ஓரங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட உள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இயங்கும் இலாப நோக்கற்ற சுற்றுச்சூழல் அமைப்பான க்ரீன் லேயர் உடன் இணைந்து இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீட வளாகத்தில் இடம்பெற்ற இத்திட்டத்தின் முதற்கட்ட அறிமுக நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தலைவர் ஷர்ஹான் முஹ்சீன், முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க, பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர் மற்றும் வங்கியின் பெருநிறுவன மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவப் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகளில் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி டி.கேதீசன், விவசாய பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கே.பஹீரதன் மற்றும் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி ஏ.கனேஸ்வரன் ஆகியோர் அடங்குவர்.

திட்டத்தின் முதல் இரண்டு கட்டங்களில் ஒரு மாதத்திற்குள் 3,000 மரக்கன்றுகள் நடப்படும் என்றும், மூன்றாவது மற்றும் இறுதி கட்டத்தில் 4,000 மரக்கன்றுகள் நடப்படும் என்றும் வங்கி தெரிவித்துள்ளது. இத்திட்டமானது கிளிநொச்சி மாவட்டத்தின் சூழலியல் நிலப்பரப்பை மேம்படுத்துவதோடு உள்நாட்டு சமூகத்தில் சாதகமான தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

நாடு முழுவதும் 100,000 மரக்கன்றுகளை நடுவதற்கான கொமர்ஷல் வங்கியின் 'மரங்கள் நிறைந்த தேசத்திற்கான' முயற்சிக்கு இந்தத் திட்டம் ஆதரவளிக்கிறது. பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகல மலைத்தொடரில் உள்ள கந்தேகம காடுகளுக்குச் சொந்தமான 100 ஹெக்டேயர் பரப்பளவிலான சீரழிந்த வாழ்விடத்தில் வங்கி மீண்டும் காடுகளை வளர்க்கும் முயற்சியினை மேற்கொண்டு வருகிறது.

# '88 Residence Kahathuduwa' திறந்த நாள் நிகழ்வு



அனைவருக்கும் தமது கனவு இல்லத்தை, நனவாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதில் தம்மை அர்ப்பணித்துள்ள *Prime Group*, கஹாதுடுவ பிரதேசத்தில் தனது புதிய சொகுசு வதிவிட நிர்மாணத்திட்டமான *88 Residence* இன் திறந்த நாள் நிகழ்வை முன்னெடுத்திருந்தது.

மாதிரி இல்லத்தை பார்வையிடுவதற்கான வாய்ப்பு, இல்லக் கனவை கொண்டிருப்பவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. *Prime Group* இன் ஒவ்வொரு நிர்மாணத்திட்டத்திலும் காணப்படும் நுணுக்கமான சிறப்பம்சங்களை நேரடியாக பார்வையிடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

உடன்படிக்கையின் கீழ், வீட்டு உரிமையாளர்களால் மொத்தப் பெறுமதியின் 25% ஷஐ மட்டும் முன்கூட்டியே செலுத்தி *88 Residence* இல் இல்லமொன்றின் உரிமையாளராகலாம். இந்தத் தொகை சுமார் ரூ.8 மில்லியன் மாத்திரமாகும். வாடிக்கையாளர்களுக்கு இல்லத்தில் குடியேறுவதற்கான வாய்ப்பு உடனடியாக வழங்கப்படுவதுடன், சட்டபூர்வ ஆவணங்கள் தயார்ப்படுத்தப்பட்டு, மாற்றம் செய்யப்படும்.

அதனைத் தொடர்ந்து, முதல் வருடத்துக்கான வட்டிச் செலவை *Prime Group* பொறுப்பேற்று, சிக்கல்களில்லாத மாற்றத்தை உறுதி செய்யும். திறந்த நாள் நிகழ்வில் *HNB* இன் பிரதிநிதிகளும் கலந்து கொண்டதுடன், கொடுப்பனவுத் திட்டம் பற்றிய விளக்கங்களையும் வழங்கியிருந்தனர்.

*Prime Lands (Pvt) Ltd* இன் விற்பனைச் செயற்பாடுகளுக்கான சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் சுரங்க பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த திறந்த தினத்தை ஏற்பாடு செய்திருந்தமைக்கான நோக்கம், கொள்வனவு செய்ய எதிர்பார்ப்பவர்களுக்கு, *Prime Group* இன் தாய் நிறுவனமான *Prime Lands Pvt (Ltd)* மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி ஆகியவற்றுக்கிடையே மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின் அடிப்படையில் நிதி வசதியை பெற்றுக் கொள்வதை இலகுவாக்கிக் கொடுப்பதாக அமைந்திருந்தது. குறிப்பாக, இந்த கொடுப்பனவு தெரிவினூடாக, வீட்டு உரிமையாளர்களுக்கு *88 Residence* இல் வீட்டு உரிமையாண்மையை பெற்றுக் கொள்வதற்கு உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன், குழுமத்தின் தனித்தனி வீட்டுத் திட்டங்களுக்கும் பொருத்தமானதாக அமைந்திருக்கும். புரட்சிகரமான கொடுப்பனவு திட்டத்துடன், வீட்டு உரிமையாண்மையை பெற்றுக் கொள்வதற்கு அதிகளவு வாய்ப்பை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், முன்னரை விட நடைமுறைச் சாத்தியமாக்கப்பட்டுள்ளது." என்றார்.


பிலியந்தலையின் கஹாதுடுவ பகுதியில் பச்சைப் பசேலென அமைந்த வயல்வெளியை அண்மித்து இந்தத் திட்டம் அமைந்துள்ளது. இயற்கை அம்சங்களுடன் ஒன்றித்த வாழ்க்கையை முன்னெடுக்க உதவும் வகையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் நவீன வசதிகள் அடங்கியுள்ளது. *88 Residence* இல் 25 இல்லங்கள் காணப்படுவதுடன், 24 மணி நேர பாதுகாப்பு, 1,365 முதல் 1,572 சதுர அடி வரையான மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட மூன்று வெவ்வேறு இல்லங்கள் காணப்படுகின்றன.

*HNB* இன் நுகர்வோர் வங்கியியல் பிரிவின் தலைமை அதிகாரி காஞ்சன கருணாகம கருத்துத் தெரிவிக்கையில், "வீட்டுஉரிமையாளராவதற்கான இலங்கையர்களின் கனவுகளுக்கு வலுவூட்ட *HNB* ஐச் சேர்ந்த நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம். *Prime Group* உடன் எமது பங்காண்மையினூடாக, வீடுகளை கொள்வனவு செய்ய எதிர்பார்ப்போருக்கு பொருத்தமான கொடுப்பனவு திட்டங்கள் வழங்கப்படுவதுடன், சொகுசான இல்லமொன்றை முன்னரை விட இலகுவாக பெற்றுக் கொள்ள வசதி ஏற்படுத்தப்படுகின்றது. பெருமைக்குரிய *88 Residence* இல் ஏதேனும் நிதிசார் தடைகளை நாம் இல்லாமல் செய்து, கனவு இல்லத்துக்கான பாதையை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம்" என்றார்.

முறையாக கட்டமைக்கப்பட்ட இல்லங்களில், மின் விளக்குகள், மின் விசிறிகள் போன்றவற்றுடன் கிரனைட் பதிக்கப்பட்டசமையலறை பண்டசாலை போன்ற வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 120 பேருந்து வழித்தடத்திலிருந்து 750 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளதுடன், கொட்டாவ பகுதியிலிருந்து 10 நிமிட தூரத்தில் அமைந்துள்ளது. *88 Residence* இனால் தென் பிராந்தியத்தின் பிரதான நகரங்களை இலகுவாக அணுகுவதற்கு, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை பயன்படுத்தக்கூடிய வசதிகள் காணப்படுகின்றன.

*88 Residence* கஹாதுடுவவில் புதிய வாழ்க்கைப் பயணத்தை முன்னெடுப்பதற்கு வருமாறு *Prime Group* அழைத்துள்ளதுடன், நவீன சொகுசு இல்லத்தின் அனுபவத்தை பெற்றுக் கொள்ளுமாறும் அழைத்துள்ளது.



# கிழவனும் கடலும்



பாத்திமா சபா,
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

நிறைய நாட்களாய் நான் வாசிக்க ஆசைப்பட்டு, வாசித்த ஒரு நூல் என்றால் அது 1952 ஏர்னெஸ்ட் ஹெம்மிங்வே எழுதிய 'old man and the sea' என்கின்ற நூலாகும். இந்நூல் தமிழில் கிழவனும் கடலும் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலை வாசிப்பதற்கு முன்பே பல சுவாரஸ்யமான விடயங்கள் என் காதில் வந்து சேர்ந்தது. அதிலும், குறிப்பாக சதாம் ஹுசைன் அவர்களைத் தூக்கில் போடுவதற்கு முன்னால் அவர் வாசிக்க ஆசைப்பட்ட நூல்களில் ஒன்றாக இந்த நூலும் இருப்பதாக அறிந்தேன். இப்படியான பல காரணங்கள் எனக்கு இந்த நூல் மீதான ஈடுபாட்டைத் தூண்டியது.




இந்த குறுநாவல், மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையேயான போராட்டத்தை மிக நுட்பமாகக் கூறுகிறது. இயற்கையின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களின் வாழ்க்கையை, குறிப்பாக மீனவர்கள் போன்ற கடல் சார்ந்த தொழிலாளர்களின் வாழ்க்கையை, இந்த நாவல் துல்லியமாகக் காட்டுகிறது. கதையின் பெரும்பகுதி கதைமாந்தரின் போராட்டங்களைக் காட்டிய போதிலும், அதில் உள்ள மக்களும், அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் கதையில் ஆழமாகப் பேசப்பட்டுள்ளது.

இக் கதையில் கியூபாவில் அதிர்ஷ்டமே இல்லாத ஒரு வயதான மீனவனான சாந்தியாகோ தனது ஒரே நண்பனான சிறுவன் மனோலின் இல்லாமல் தனியாக மீன் பிடிக்கத் தனது சிறு படகு மூலம் கடலிற்குச் செல்கிறான். அந்த பயணம் சாகசத்தின் உச்சத்திற்கு அந்த வயதான கிழவனை அழைத்துச் செல்கிறது. அது அவனின் வாழ்வின் இறுதி எல்லை வரை பந்தாடித் திருப்புகிறது. குறிப்பாகக் கிழவன் சாந்தியாகோ எண்பத்து நான்கு நாட்கள் கடலுக்குச் சென்று தொடர்ச்சியாக வெறுங்கையுடன் திரும்புகிறான். ஆகையால், அவனுக்கு உற்ற துணையாயிருந்த சிறுவனும் அவனது பெற்றோரால் வேறு படகிற்கு அனுப்பப்படுகிறான். எப்போதும் போல், அன்றுதான் தனது அதிர்ஷ்ட தினம் எனச் சிறுவனிடம் சொல்லிவிட்டு கடலுக்குச் செல்கிறான் கிழவன். பல மணி நேரக் காத்திருப்பிற்குப் பிறகு தூண்டிலில் பெரிய மார்லின் மீன் சிக்குகிறது. உண்மையில் சிக்கியது மீனா? கிழவனா? என்ற இடத்திலிருந்து கதை வேறு தளத்திற்குத் தாவுகிறது. பரபரப்பாகச் செல்லும் கதை, அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று படிப்பவரின் இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்கிறது.

தனிமையின் துயரம் மற்றும் தோல்வியின் வெறுமையில் உழன்றாலும், தன்னம்பிக்கையைத் துணைகொண்டு, ஒவ்வொரு நாளையும் புதிய நாளாக எதிர்கொள்ளும்போது, சாந்தியாகோவிற்கு எண்பத்தைந்தாவது நாளன்று, படகைவிட நீளமுடைய மார்லின் மீன் தூண்டிலில் அகப்படுகிறது. ஆம் கடல் அலைகள் போன்றதல்ல கிழவரின் மனம் அது சமநிலை வாய்ந்தது.

அந்த சமநிலை அசாதாரணமான சூழ்நிலைகளைக் கூட, கையாளும் திறன் கொண்டது என்கின்ற விடயத்தை இந்த குறுநாவல் நமக்கு கற்றுத் தருகிறது. அந்த வயோதிபக் கிழவனுக்கு அன்று அதிர்ஷ்டம் மிதமிஞ்சியதாக இருக்கிறது. அவரது தூண்டிலில் மிகப் பெரிய மீன் சிக்கியதால் அது அவருக்கு ஆனந்தத்தோடு அதிர்ச்சியையும் சேர்த்துத் தரும் நிகழ்வாய் அமைந்து விடுகிறது.

அந்த மீன் மிகப் பெரியது. சுமார் 500 கிலோ கிராம் எடை இருக்கும். அதன் நீளம் படகை விட இரண்டடி கூடுதலாகவே இருக்கும். அதை அதன் போக்கில் விட்டுச் சோர்வடையச் செய்து வீழ்த்த வேண்டும். தூண்டில் கயிற்றைத் தளர்த்தி அதன் பின்னாலே படகு மீனின் இழுவையில் செல்லும் படி செயல்படுகிறான் அந்த கிழவன். படகும் மீனும் நீரோட்டத்தின் வழியே அதிவேகமாகச் செல்கின்றன.

துரதிர்ஷ்டவசமாக அந்த மீன் மூன்று நாட்களில் வெகு தூரம் அந்த கிழவனை அழைத்துச் சென்று விட்டது. கிழவருக்கு உடல் வலிக்கின்றது. சரியான உணவில்லை. அவ்வப்போது கடலில் கிடைக்கும் சிறுமீன்களைப் பச்சையாக மென்று தின்று உயிர்வாழ்கின்றான். தன் மனதைச் சமநிலையில் வைத்துக் கொள்ளப் பல யுக்திகளைக் கையாள்கின்றான்.

கடல் பயணம் என்பது நிலப் பரப்பிலிருந்து, முழுவதுமாகத் துண்டித்துக் கொண்டு, முடிவில்லா நீர்ப்பரப்பில், வானத்து நட்சத்திரங்கள், பறவைகள், கடல் வாழ் உயிரினங்களென முற்றிலுமாக இயற்கையோடு இணைந்துவிடுவதுதான்.

யாருமற்றத் தனிமையில் சிறுவனின் துணைக்காக ஏங்கும் வயோதிப மீனவன், விருப்ப விளையாட்டான பேஸ்பாலின் நிகழ்வுகளைக் கேட்க வானொலியிருந்தால் நன்றாகவிருக்கும் என்ற எண்ணம் தோன்றியவுடனே, 'தேவையான சிந்தனையில் கவனம் செலுத்து' என தனக்குத் தானே கூறிக் கொள்ளும் வார்த்தைகள் இக் கதையில் மிகவும் தத்துவார்த்தமாக அமைந்துள்ளது.

நாவலின் போக்கில் வெறுப்போ, வன்மமோ, வில்லத்தனமோ, பகையேயில்லாமல், மனிதனுக்கும் இயற்கைக்குமானத் தொடர்பை ஆழமாகப் பதிவுசெய்திருப்பதோடு, தன் முயற்சியில் தோற்காத மனிதனை யாராலும் தோற்கடிக்க முடியாது என்ற உளவியலையும் முற்றாகப் பேசுகிறது இந்தக் கதை.

துடுப்பின் அலகுகள் நீரில் அமிழ, படகைத் துறைமுகத்திற்கு வெளியே கிழவன் செலுத்தும்போது கதையின் பயணமும் தொடங்குகின்றது. கிழவனுக்கும் மீனுக்கும் இடையேயான போராட்டம்தான் நாவலின் களம். ஒரு சமயம் அவன் அந்த மீனோடு ஒரு சகோதரனைப் போல வாஞ்சை கொள்கிறான்.

மற்றொரு சமயம் போரில் எதிர்நிற்கும் பகைவனைப் போல, அதனிடம் தன் வலிமையைக் காட்டி செருக்கோடு நடந்து கொள்கின்றான். எத்தனையோ சவால்களுக்கு மத்தியிலும் அவன் கடலையும் அங்குக் காணக் கிடைக்கும் அழகான காட்சிகளையும் தவற விடவில்லை என்பதே உண்மை.

தன் படகில் வந்து உட்காரும் சிறிய பறவையுடன் அந்தச் சோதனையான சூழலிலும் அவன் உரையாடல் நடத்தும் விதம் கவித்துவமானது. மறுத்து உணர்ச்சியற்றுப் போன தன் கையோடு பேசுகிறான்.

பழைய நினைவுகளை நினைத்தபடி தன் நண்பனான அந்த சிறுவனை அழைத்து வந்திருக்கலாம், உதவியாக இருந்திருப்பான் என்று எண்ணிக்கொண்டே இப்போது இருப்பது கடலும் நானும் தான் என்கிற நிதர்சனத்தை உணர்ந்து கொள்கின்றான். தூண்டில் முள்ளில் சிக்கி படகை இழுத்துச் செல்லும் மீனை அந்த தருணத்தில் தனது சகோதரனாய் பாவித்துக் கொள்கிறான் அந்த கிழவன். அதன் தேவைகள் குறித்து அகத்தில் தனது தேவைகள் மேலெழும் போதெல்லாம் கவலையும் கொள்கின்றான்.

அடிக்கடி வலுவிழக்கும் தன் உடலையும் சோர்ந்து போகும் மனதையும் அவன் உற்சாகப்படுத்தும் விதம் வித்தியாசமானது. அந்த நம்பிக்கை வீரியம் மிகுந்தது. இறுதியில் அந்த ராட்சத மீனை வீழ்த்தி விடுகிறான். அதைத் தனியொரு மனிதனாய் போராடி படகோடு இறுகக்கட்டி விட்டான்.

ஆனால், இனிமேல் தான் சோதனை துவங்குகிறது. கரையை அடைவது அவ்வளவு எளிதானதாக இருக்கப்போவதில்லை.

இப்போது இரத்த வாடைக்கு அகல வாய் திறந்து கூரான பற்களோடு நிறைய சுறா மீன்கள் அவன் படகை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இந்த சுறா மீனோடு போராடுவதே இக்குறுநாவலின் மீதிக் கதை.

இந்நாவலில் ஆசிரியர் குறைவான கதைமாந்தர்களைக் கொண்டு, அந்தக் கதை மாந்தர்கள் வாசகரின் மனதில் அழுத்தமாகப் பதியக் கூடிய வகையில் அமைத்திருத்தல் சிறப்பாகும் ,நாமே கிழவராக, சிறுவனாக, கடலாக, பறவையாக, மீனாக, சுறாக்களாக என்றெல்லாம் மாரி மாரி கதை பாத்திரங்களாகக் கதையின் போக்கில் பயணிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியமை ஆசிரியரின் முழுமையான வெற்றியாகும்.

சில நேரங்களில் நமக்கு நாமே கூறிக்கொள்ளும் ஆறுதல்களே எங்களை உறுதிப்படுத்தும். அப்படித்தான் இந்த கதையிலும் தான் உடைந்து போகும் ஒவ்வொரு தருணத்திலும் தனக்குத் தானாகப் பல ஆறுதல்களை இந்த கிழவன் கூறிக் கொள்கிறான்.

முதுமையையும், அனுபவத்தையும் தன்னில் வைத்துக்கொண்டு 84 நாட்கள் வெறுங் கையுடன் திரும்ப எத்தகையத் திடம் வேண்டும் இத்தகைய மனத்திடம் அனைவரிடத்திலும் உண்டு என்பதை எழுத்துக்கள் மூலம் பக்குவமாகக் கையாண்டு இருக்கின்றார் கதை ஆசிரியர். அந்த ஒவ்வொரு நாளும் சாந்தியா கோவின் போராட்டம், தோல்வியுடன் தொடர்ந்தது.

இரவும் பகலும் என மூன்று நாட்கள் மார்லினுடான நம்பிக்கையின் போராட்டத்தை அற்புதமாக அரங்கேற்றி இருக்கின்றார் கதை ஆசிரியர். மரணத்திலிருந்து தப்புவது அல்ல வாழ்க்கை, அதையும் மீறி அதை எப்படி எதிர்கொள்வது என்பதை எடுத்துக்காட்டுகிறது கிழவனும் கடலும் என்ற குறுநாவல்.

வாழ்க்கை எனும் கடலில் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு மார்லின் உண்டு. எங்கோ எப்போது என்று இல்லாமல் அந்த மார்லி நம்பிக்கையின் பின்னால் மறைந்திருக்கின்றது.

அதை அடைவதற்குப் பொறுமையைக் கைக்கொள்வது என்பது அவரவர் கையில் தான் இருக்கின்றது. சுறாக்கள் இல்லாவிட்டால் சுவாரசியங்கள் ஏது. இந்த வாழ்கையில் கண்டிப்பாகச் சுறாக்கள் போல் பிரச்சனைகள் வரும் அதனை எதிர்கொள்ளாமல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது கடினம் ஒரு புள்ளிமானிடம் சிங்கம் வெல்வது ஒன்றும் அற்புதம் இல்லை.

பலத்த எதிராளி தனக்குப் போட்டி என்று வந்துவிட்டால் தமக்குள் உள்ள முழு திறமையையும் வெளிக்கொண்டுவர முயற்சிப்பது வெற்றியாகும். இந்த வயோதிப தனிமனிதனின் பிரமாண்ட தனித்துவத்தையும் வலி தாங்கும் நெஞ்சத்தையும் மிக அற்புதமாக எழுத்தாக்கி வயது என்பது வலிமையை நிர்ணயிப்பது அல்ல என்று இந்நாவலினூடாக நிரூபிக்கின்றார் ஹம்மிங்வே.

கடலில் இருப்போருக்குக் கரையே காட்சிப் பொருளாகிறது உயிரோடு மீள வேண்டும் அதுவும் பொருளோடு மீள வேண்டும் என்கின்ற உணர்வோடு இருக்கின்றான் கிழவன்.

வெற்றிக்காக நான் துரத்தினால் அந்த வெற்றி என்னை இழுத்துக் கொண்டு ஓடுகிறது என்கின்ற விடயம் எல்லாம் மிகவும் யதார்த்தமாக இக்கதையில் பேசப்பட்டுள்ளது. சற்றும் முற்றும் பறந்த கடலின் நடுவே இருந்தாலும் தனிமையின் பயம் அந்த கிழவனை வாட்டியது போலில்லை.

கடலோடு, ஆகாயத்தோடு, காற்றோடு கடவுளோடு தான் கொல்லப்போகும் மீனோடு இன்னும் தனக்குத்தானே பேசி தன் தனிமையைப் போக்கிக் கொள்கின்றான். நடுக்கடலில் களைப்போடு வந்து தூண்டல் கயிற்றில் அமரும் சிறிய பறவையிடம் அவன் கொள்ளும் அன்பும் பேச்சும் மனதை வருடும் விதமாக அமைந்துள்ளது.

கிழவருக்கு உதவிக்கு இருந்த சிறுவன் அவனது தந்தையின் வற்புறுத்தலால் தவிர்க்கமுடியாமலும் விருப்பமின்றியும் பெரியவரை தன்னந்தனியே விட்டுச் செல்வதைப்போலத் தான் நமது வாழ்க்கைப் போராட்டத்திலும் நம்முடன் இருப்பவர்கள் தொடர்ந்தும் இருப்பார்கள் என்று கருதக் கூடாது" நம்மோடு பயணிப்பவர்களும் சில நேரம் சூழ்நிலை கைதியாகி விடுகின்றனர்.

தன் கையே தனக்கு உதவி என்கின்ற பொன்மொழிக்கமைய நமக்கான இலக்கை நோக்கிய பாதையை நாமே தேர்ந்தெடுத்து இறுதிவரை உறுதியுடன் போராட வேண்டும். அந்த விட முயற்சிகொண்ட போராட்டம் தான் பேரானந்தத்தைத் தரும் என்கின்ற ஒரு மிகப்பெரிய அறிவுரையை இந்த குறுநாவல் சொல்லித் தருகின்றது.

மேலும் நம் முயற்சிகள் தோல்வியில் முடிந்தாலும் அதனால் நாம் இன்னும் பக்குவப்படுகின்றோம் என்கின்ற யதார்த்தத்தை இந்நூலின் ஊடாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.



அருணாசல பிரதேசம்

## குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை

# முக்கிய குற்றவாளிக்கு மரண தண்டனை

அருணாசல பிரதேசத்தில் அரச பாடசாலையொன்றில் குழந்தைகளுக்கு நடந்த பாலியல் தொல்லை வழக்கில், முக்கிய குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அருணாசல பிரதேசத்தில் ஷி-யோமி மாவட்டத்தில் அரச பாடசாலையொன்று செயல்பட்டு வருகிறது. இதில் பணியாற்றி வந்த வார்டன்,
8 ஆண்டுகளாக
21 குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை அளித்த அதிர்ச்சி சம்பவம் தெரிய வந்துள்ளது.

இதுபற்றி யுபியா பகுதியில் உள்ள சிறப்பு போக்சோ கோர்ட்டில் வழக்கு விசாரணை நடந்தது. இதில், பாடாசாலையின் வார்டன், இந்தி ஆசிரியர் மற்றும் முன்னாள் தலைமையாசிரியர் ஆகியோருக்கு எதிராக வழக்கு நடைபெற்றது.

இந்நிலையில்,
போக்சோ சட்டத்தின் கீழ், முக்கிய குற்றவாளியான வார்டனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும், இந்தி ஆசிரியர் மற்றும் முன்னாள் தலைமையாசிரியர் இருவருக்கும் தலா 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி

## 'உணவில் கரப்பான் பூச்சி'

# மன்னிப்பு கோரியது எயார் இந்தியா

எயார் இந்தியா விமானத்தில், விமான பயணி ஒருவருக்கு பரிமாறப்பட்ட, உணவில் கரப்பான் பூச்சி கிடந்ததையடுத்து, குறித்த விமான நிறுவனம் அவரிடம் மன்னிப்பு கோரியுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருகையில், "புதுடெல்லியை சேர்ந்தவர் சுயிஷா சாவந்த், தனது 2 வயது குழந்தையுடன் நியூயோர்க் நகரத்துக்கு எயார் இந்தியா விமானம் மூலம் புதுடெல்லியில் இருந்து சென்றுள்ளார்.

இதற்கிடையே, விமான பயணிகளுக்கு ஒம்லெட்டுடன் கூடிய மதிய உணவு கொடுக்கப்பட்டுள்ளது. அதனை வாங்கி சுயிஷா தனது குழந்தைக்கு ஊட்டியபடி சாப்பிட்டு கொண்டிருந்த போது, 'ஒம்லெட்'டில் ஒரு கரப்பான் பூச்சி இறந்த நிலையில் கிடந்ததை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். பின்னர் இதனை தனது கைபேசியில் காணொளியாக பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில், குறித்த விமான நிர்வாகத்திடம் புகார் அளித்த நிலையில், இதற்கு அந்நிறுவனம் மன்னிப்பு கோரியுள்ளது. ஆனாலும் சுயிஷா கோபத்தில், தான் எடுத்த காணொளியை சமூகவலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார்.

சென்னை

# துணை முதல்வரானார் உதயநிதி ஸ்டாலின்



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகவுள்ள உதயநிதி ஸ்டாலின் ஞாயிற்றுக்கிழமை (30) தமிழகத்தின் மூன்றாவது துணை முதலமைச்சராக பொறுப்பேற்றார்.

மேலும்,
6 அமைச்சர்களின் இலாகாக்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி உயர்கல்வித்துறை அமைச்சரான பொன்முடிக்கு வனத்துறையும், நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சரான தங்கம் தென்னரசுவுக்கு நிதி மற்றும் சுற்றுச்சூழல் நலத்துறையும், சுற்றுச்சூழல் அமைச்சரான வி.மெய்யநாதனுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையும், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரான கயல்விழிக்கு மனிதவள மேம்பாட்டுத்துறையும், வனத்துறை அமைச்சரான மதிவேந்தனுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரான ராஜகண்ணப்பனுக்கு காதி மற்றும் பால்வளத் துறையும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே, துணை முதல்வராக உதயநிதி பதவி ஏற்றதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஆதரவு தெரிவித்தும், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

விஸ்கான்சின்

# "கமலா ஹாரிஸ் மனநலம் பாதிக்கப்பட்டவர்"

## பேரணியில் ட்ரம்ப் உரை



ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிசை "மனநலம் பாதிக்கப்பட்டவர்" என்று குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக சாடியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான தேர்தல், நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில், முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளனர்.

இந்நிலையில், விஸ்கான்சினில் நடந்த பேரணியில் ட்ரம்ப் பேசுகையில், "ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் மனநலம் பாதிக்கப்பட்டவர். வன்முறை குற்றங்களை செய்யும் புலம்பெயர்ந்தோர்கள் அரக்கர்கள், மோசமான விலங்குகள். நாட்டிற்குள் அதிகமான சட்டவிரோத குடியேறிகளை அனுமதித்ததற்காக ஹாரிஸ் மற்றும் ஜனாதிபதி ஜோ பைடன் தான் காரணம்" என்று பேசினார்.

இந்நிலையில், ட்ரம்பின் இந்த பேச்சுக்கு கமலா ஹாரிஸ் ஆதரவாளர்களிடையேயிருந்து பலத்த விமர்சனங்கள் எழுந்த வண்ணமுள்ளன.



வொஷிங்டன்

# இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்தார் பைடன்

ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவை இஸ்ரேல் குண்டு வீசி கொன்றமை, பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் நடவடிக்கை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கருத்து தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லாவை, தங்களது விமானப்படை ஏவுகணையால் தாக்கி கொன்றது என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறுகையில், "தன்னை தற்காத்துக் கொள்ளும் இஸ்ரேலின் உரிமையை அமெரிக்கா ஆதரிக்கிறது.

ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டது, ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள், இஸ்ரேலியர்கள் மற்றும் லெபனான் குடிமக்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் நடவடிக்கை. ஹிஸ்புல்லா, ஹமாஸ் மற்றும் ஈரானிய ஆதரவு குழுக்களுக்கு எதிராக இஸ்ரேலின் நடவடிக்கையை அமெரிக்கா ஆதரிக்கிறது" என்று தெரிவித்தார். இதன் மூலம் இஸ்ரேலுக்கு தனது ஆதரவை ஜோ பைடன் வெளிப்படுத்தினார்.

## நியூசிலாந்துக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது இலங்கை




நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரை இலங்கை கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த இலங்கை, காலியில் வியாழக்கிழமை (26) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (29) முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே தொடரை 2-0 என இலங்கை கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 602/5 (துடுப்பாட்டம்: கமிந்து மென்டிஸ் ஆ.இ 182, தினேஷ் சந்திமால் 116, குசல் மென்டிஸ் ஆ.இ 106, அஞ்சலோ மத்தியூஸ் 88, திமுத் கருணாரத்ன 46, தனஞ்சய டி சில்வா 44 ஓட்டங்கள். பந்துவீச்சு: கிளென் பிலிப்ஸ் 3/141, டிம் செளதி 1/70)

நியூசிலாந்து: 88/10 (துடுப்பாட்டம்: மிற்செல் சான்ட்னெர் 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 6/42, நிஷான் பிரீஸ் 3/33, அசித பெர்ணாண்டோ 1/8)

நியூசிலாந்து (பொலோ ஒன்): 360/10 (துடுப்பாட்டம்: கிளென் பிலிப்ஸ் 78, மிற்செல் சான்ட்னெர் 67, டெவோன் கொன்வே 61, டொம் பிளென்டல் 60, கேன் வில்லியம்சன் 46 ஓட்டங்கள். பந்துவீச்சு: நிஷான் பிரீஸ் 6/170, பிரபாத் ஜெயசூரிய 3/139) தனஞ்சய டி சில்வா 1/28)

போட்டியின் நாயகன்: கமிந்து மென்டிஸ்

தொடரின் நாயகன்: பிரபாத் ஜெயசூரிய



## அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான டென்னிஸ்:

# சம்பியனான மட்டு. சென்.மிக்கேல்

**அஸ்ஹர் இப்றாஹீம்**

இலங்கை பாடசாலைகள் டென்னிஸ் சங்கம் நடாத்திய 13 வயதுக்குட்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய டென்னிஸ் தொடரில் ஆண்களுக்கான பிரிவில் மட்டக்களப்பு சென். மிக்கேல் கல்லூரி சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் குருநாகல் மலிய தேவ கல்லூரியை வென்றே சென். மிகேல் சம்பியனானது.

# கிழக்கில் சிறந்த கிரிக்கெட் அணியாக கல்முனை சாஹிரா



**அஸ்ஹர் இப்றாஹீம்**

இலங்கை கிரிக்கெட் சபையுடன் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இலங்கையில் கிரிக்கெட் துறையில் பிரகாசிக்கும் பாடசாலைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வானது கொழும்பு, பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை(26) நடைபெற்றபோது கிழக்கு மாகாணத்தில் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான சிறந்த கிறிக்கட் அணி விருது கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி அணிக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# ஒஸஸுனாவிடம் தோற்ற பார்சிலோனா

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், ஒஸஸுனாவின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(29) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 2-4 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா தோற்றது.

பார்சிலோனா சார்பாக பௌ விக்டர், லமீன் யமால் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

ஒஸஸுனா சார்பாக, அன்டெ புடிமிர் இரண்டு கோல்களையும், பிரயான் ஸர்கோஸா, அபெல் பிரெடொனெஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.



## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் சிற்றி நியூகாசில் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் சனிக்கிழமை (28) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொஸ்கோ கவ்ரிகால் பெற்றதோடு, நியூகாசில் சார்பாகப் பெறப்பட்ட கோலை அந்தனி கோர்டன் பெற்றார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற லெய்செஸ்டர் சிற்றியுடனான போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது. ஆர்சனல் சார்பாக, கப்ரியல் மார்டினெல்லி, லியன்ட்ரோ ட்ரொஸார்ட், கை ஹவேர்ட்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. லெய்செஸ்டர் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஜேம்ஸ் ஜஸ்டின் பெற்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 30,செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.